**O.S.No. 133/2025 நாள் 09.07.2026 PW 1 – திருமதி. அருள்ஜோதி .**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (பிரதிவாதிதரப்பில்)

நான் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சிப்காட் காவல்நிலையத்தில் பிரதிவாதி மீது ஒரு புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார்மனு என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். பிரதிவாதியால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வாதியால் தாக்கல் செய்யப்பட்ட புகார்மனு உதவி ஆய்வாளரால் சான்றிடப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான மனு ரசீது எண். 712/2024 என்று 18.09.2024 அன்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதியால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட புகார்மனு ரசீது உதவி ஆய்வாளரால் சான்றிடப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகார்மனுவின்போது நடைபெற்ற விசாரணையில் நான் வாக்குமூலம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படுவது நான் காவல்நிலையத்தில் கொடுத்த வாக்குமூலம் என்றால் சரிதான். பிரதிவாதியால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வாதிகொடுத்த வாக்குமூலம் உதவி ஆய்வாளரால் சான்றிடப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியும் அதுபோல வாக்குமூலம் கொடுத்தார் என்றால் அவர் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்று தெரியாது. இருதரப்பினரையும் ஒன்றாக வைத்துதான் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் உள்ளாட்சி தேர்தல் செலவிற்காக அவர் கடன் பெற்றதாகவும், அந்த தொகையை

திரும்ப தந்து விடுவதாகவும் சொன்னார் என்றால் இல்லை. பிரதிவாதி அவர் கொடுத்த வாக்குமூலத்தில் மேற்சொன்னவாறுதான் எழுதிக்கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தபசில் சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 7 செண்ட் என்று சொன்னார்கள் வில்லங்கசான்று எடுத்து பார்த்தபோது 6.87 செண்ட் இருந்தது. சிப்காட் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு பின்புதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராதில் சிப்காட் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு, மற்றும் அதன் அடிப்படையில் நடந்த விசாரணை பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்த இடத்தை சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த இடத்தில் ரோடு எந்த பக்கம் உள்ளது என்றால் தபசில் சொத்து வடக்கு நோக்கி அமைந்துள்ள பிளாட் அதற்கு முன்பு ரோடு உள்ளது. பிரதிவாதிதான் அழைத்து சென்றார். கீழ்பக்கம், வடபக்கம், தெற்குபக்கம், மேற்குபக்கம் என்ன என்ன உள்ளது என்றால் கார்னரில் ஒரு வீடு இருந்தது, அதற்கு அடுத்து தொடர்ச்சியாக காலி மனைதான், நடுவே உள்ள பிளாட்டை காண்பித்து தபசில் சொத்து என்று பிரதிவாதி கூறினார். மேற்படி சொத்தின் 4 மால்கள் தெரியுமா என்றால் தெரியாது. கிழமேல், தென்வடல் அளவு எவ்வளவு என்றால் நினைவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் யாரெல்லாம் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை. எனது தகப்பனார் பெயர் என்னவென்றால் தங்கராஜ். அவர் அருள்ஜோதி தீபாவளி சீட்டு நடத்தினாரா என்றால் தெரியவில்லை. அருள்ஜோதி சேவிங்ஸ் என்று நடத்தினாரா என்றால் தெரியவில்லை. தற்போதும் எனது அப்பாவுடன் சுமூகமான அப்பா மகள் என்ற உறவுமுறையில்தான் இருக்கிறேன் என்றால் சரிதான். என் அப்பா வட்டி தொழில் லைசென்ஸ் எடுத்து நடத்துகிறார் என்றால் சரிதான். ஜவுளி

வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான். பிரதிவாதி எனது தகப்பனாருக்கு நீண்டகால நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லிய சமயத்தில் பிரதிவாதியின் மனைவி உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தொழிலை நான்தான் பார்த்துக்கொண்டேன் என்றால் இல்லை. எனக்கு வழக்கறிஞர் தொழில் மட்டும்தான் வேறு தொழில் கிடையாது என்றால் சரிதான். 01.08.2025 ல் எனது தகப்பனார் நடத்தி வந்த நிறுவனத்தில் வேலை பார்த்த பெண்ணிற்கு பிரச்சனையாகி தென்பாகம் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டு முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முதல்தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான் தென்பாகம் காவல்நிலைய குற்ற எண். 492/2026 ன் முதல்தகவல் அறிக்கையின் C.C.T.N.S நகல் **பி.வா.சா.ஆ– 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல்தகவல் அறிக்கை இசக்கி பிரபாவதி என்பவர் எங்கள் அலுவலகத்தில் வவுச்சர் போட்டு பணம் எடுத்து ஏமாற்றியதற்காக பதிவு செய்யப்பட்ட வழக்காகும். அந்த பிரச்சனை ஏற்பட்டதால் என் அப்பா அலுவலகத்தின் கணக்கை முடித்து அந்த பிஸ்ன்ஸை முடித்து குளோஸ் செய்வதற்காக நான் மேற்பார்வை செய்து வரவு செலவுகளை கணக்கிட்டு முடித்துக்கொண்டிருக்கிறேன். பி.வா.சா.ஆ–4 ன் முதல்தகவல் அறிக்கையில் எனது அப்பா தங்கராஜ் அருள்ஜோதி பைனான்ஸ் என்ற அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்றும், அந்த நிறுவனத்தின் கணக்குகள் வரவு செலவு அனைத்தும் நான்தான் நிர்வாகம் செய்து வருகிறேன் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–2 கிரைய ஒப்பந்தம் 15.02.2022 தேதியிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ–2 ல் தவணை காலம் ஒரு வருட காலத்திற்குள் வில்லங்கத்தை சரி செய்து கிரையம்

முடித்து கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தது 02.07.2025 என்றால் சரிதான். கிட்டதட்ட 3 வருட காலம் முடிவதற்கு சில மாதங்களுக்கு முன்பு என்றால் அவர் வரவேயில்லை. வழக்கறிஞர் அறிவிப்பும் 13.02.2025 ல்தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது எனது தகப்பனார் எந்த முகவரியில் குடியிருக்கிறார் என்றால் அண்ணாநகர் 1வது தெரு, கதவு எண். 29/24 என்ற முகவரியில் குடியிருக்கிறார். எவ்வளவு வருடமாக குடியிருக்கிறார் என்றால் 2019 லிருந்து குடியிருக்கிறார். அதற்கு முன்பு சில்வர்புரத்தில் இருந்தாரா என்றால் முத்தம்மாள் காலனியில் குடியிருந்தார். அதற்கு முன்பு சில்வர்புரத்தில் குடியிருந்தார். நான் எந்த முகவரியில் குடியிருக்கிறேன் என்றால் தற்போது என் அப்பாவுடன் இருக்கிறேன். அதற்கு முன்பு என் கணவர் வீட்டில் அண்ணாநகர் 8 வது தெரு கதவு எண். 47 ல் இருந்தேன். எவ்வளவு நாளாக அண்ணாநகர் 8 வது தெருவில் இருந்தேன் என்றால் 2012 லிருந்து 2022 வரை இருந்தேன். 2022 ல் எந்த மாதத்திலிருந்து குடியிருந்தேன் என்றால் நவம்பர் மாதத்தில் குடியிருந்தேன். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எனது தகப்பனாருடன் தகப்பனார் குடியிருக்கும் முகவரியில்தான் குடியிருந்து வருகிறேன். 2025 ல் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அண்ணாநகர் 8 வது தெரு கதவு எண். 47 ல் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். இந்த சொத்தை கிரைய ஒப்பந்தம்எழுதுவதற்கு முன்பு 6.87 இருந்தது என்று யார் வில்லங்கசான்றிதழ் போட்டு பார்த்தார் என்றால் என் அப்பாவிற்குத்தான் தெரியும். கிரைய ஒப்பந்தம், பணம் கொடுத்த விவரங்கள் எல்லாம் என் அப்பா முன்னிலையில்தான் நடந்தது என்றால் அப்பாவிற்கு தெரியும். ரூ.5,00,000/-என் அப்பாவின் ரூபாயா, என்னுடைய ரூபாயா என்றால் என்னுடைய ரூபாய். ரூ.5,00,000/- கொடுத்ததற்கு

அதை கொடுத்தற்கான கணக்கு விவரங்கள் உள்ளதா என்றால் உள்ளது. நான் எவ்வளவு நாளாக வழக்கறிஞராக உள்ளேன் என்றால் 2024 லிருந்து. 2022 ல் என்ன வேலை பார்த்தேன் என்றால் ஒரு வேளையும் பார்க்கவில்லை. 2022 ல் நான் வேலை பார்க்காததால் என்னிடம் எந்த வருமானமும் கிடையாது என்றால் என் அப்பா எனக்கு போட்ட நகை இருந்தது. என் அப்பா எனக்கு போட்ட நகையை பிப்ரவரி மாதம் 2022 ல் அடகு வைத்து பணம் கொடுத்தேன் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நகையை அடமானம் வைத்து வருடம் வருடம் மாற்றி வைத்ததால் அதற்கான ஆவணம் என்னிடம் இல்லை. 2022 பிப்ரவரி மாதம் நகையை வங்கியில் அடகு வைத்திருந்தால் எனது வங்கி கணக்கில் துலங்கும் என்றால் நான் ஏற்கனவே ஒரு இடம் வாங்குவதற்காக நகையை அடமானம் வைத்து கையில் ரூ.15,00,000/- வைத்திருந்தேன். மேற்படி விவரங்களும் எனது வங்கிகணக்கில் துலங்கும் என்றால் சரிதான். நான் எந்த வங்கியில் வரவு செலவு வைத்திருக்கிறேன் என்றால் என் அப்பா கணக்கில் அடமானம் வைத்து பணம் கொடுத்தார். நகையை அடகு வைத்தது யார் என்றால் என் அப்பாதான் வைத்தார். என் அப்பா எவ்வளவு ரூபாய்க்கு வைத்தார்கள், எப்போது வைத்தார்கள், எந்த நகையை வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த நகை என் அப்பா எனக்கு செய்து கொடுத்த நகை என்றால் சரிதான். ரூபாய் கொடுத்த சமயத்தில் நான் நகையை அடகு வைத்து கொண்டுவரவில்லை என்றாலும், என் அப்பாதான் நகையை அடமானம் வைத்து பணம் கொடுத்தார் என்றாலும் சரிதான், என்னுடைய மற்றும் என் கணவரின் வரவு செலவுகளை என்அப்பாதான் பார்த்து வந்தார். எல்லா வரவு செலவுகளையும் என் அப்பா பார்த்துக்கொண்டிருந்த சமயத்தில் ரூ. 15,00,000/- அடகு வைத்து நிலம்

வாங்குவதற்காக கையில் வைத்திருந்ததாக சொல்லும் தொகையையும் என் அப்பாதான் தயார் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 தம்பி. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆகியது என்றால் 2012. தம்பிமார் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் தனியாக வேலை செய்கிறார்கள். தனியாக இருக்கிறார்கள். எவ்வளவு நாளாக என் தம்பிமார் தனியாக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் அவர்கள் திருமணமாகி தனியாக இருக்கிறார்கள். 2022 ல் பணம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் நான் எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரிதான், எனது கணவர் வேலை பார்த்தார். தபசில் சொத்து இருக்கிற இடம் மீளவிட்டான் ரோடு என்றால் சரிதான், தெருக்குள் சில்வர்புரத்தில் உள்ளது. மீளவிட்டான் ரோட்டின் வடபுறம்தான் சில்வர்புரம் என்ற ஊர் உள்ளது என்றால் சரிதான். இடம் இருக்கிற இடம் தூத்துக்குடி 4ம்கேட்டிலிருந்து ஸ்டெர்லைட்டிற்கு போககூடிய ரோடு என்றால் சரிதான். என் அப்பாவிற்கு சில்வர்புரத்தில் சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். ரூபாய் கொடுத்த அன்று என் அப்பாதான் என்னிடம்கொடுத்து ரூ.5,00,000/−கொடுக்க சொன்னார் நான் கொடுத்தேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம், வில்லங்கசான்றிதழ் பார்த்தது, பத்திர அலுவலகத்தில் போய் எழுதும்போது என் அப்பாவும் உடன் இருந்தார் என்றல் சரிதான். 2024 ல் காவல்நிலையத்தில் வைத்து பேசி முடித்தபிறகு பிரதிவாதி ரூ.5,00,000/−த்தை 3 மாத காலத்தில் எனது வீட்டிற்கு வந்து நானும், எனது அப்பாவும் இருக்கும்போது கொடுத்தார் என்றால் இல்லை. பிரதிவாதி ரூபாயை கொடுத்த விவரம் சம்மந்தமாக என் அப்பாவை விசாரிக்க எனக்கு ஆட்சேபணை உண்டா என்றால் இல்லை. என் அப்பா 30, 40 வருடகாலமாக வட்டி தொழில், தீபாவளி சீட்டு, ஜவுளி வியாபாரம்செய்து வருகிறார் என்றால் தெரியவில்லை. வட்டி தொழில்

செய்வதற்கு உரிமம் பெற்று கடன் கொடுக்ககூடிய சமயத்தில் வட்டி தொகையை எடுத்துக்கொண்டு கடன் கொடுப்போம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கறிஞர் இருப்பதால் வருமான வரி கணக்கு செலுத்துகிறேனா என்றால் இல்லை. என் தகப்பனார் வருவமான வரி கணக்கு செலுத்துகிறாரா என்றால் செலுத்துகிறார். என் தகப்பனார் நகையை அடகு வைத்து பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விவரம் என் தகப்பனாரின் வருமான வரி கணக்கில் துலங்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தபசில் சொத்து இருக்கக்கூடிய இடத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. 2022ல் கிரைய ஒப்பந்தம் எழுதியதாக சொல்லக்கூடிய சமயத்தில் தபசில் சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவாக இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி இரண்டு முறை மாநகராட்சி கவுன்சிலராகவும், பிரதிவாதியின் மனைவி மாநகராட்சி கவுன்சிலராகவும், மேற்கு மண்டல தலைவராகவும்இருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 15.02.2022 தேதியில் உள்ளாட்சி தேர்தலும் நடந்தது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் பேசி கிரையம் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், வட்டி வகைக்காகத்தான் ரூ.5,00,000/– கொடுத்துவிட்டு ஆவணத்தை மோசடியாக தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. சொத்தின் மதிப்பு தற்போது 1 ½ கோடி ரூபாய் போகும் என்றாலும், 2022ல் ரூ.1 கோடி மதிப்பு என்றாலும் அது பற்றி தெரியவில்லை. எனது தகப்பனார் அடகு வைத்து ரூபாயை கொடுக்க சொன்னார் என்ற விவரத்தை எல்லாம் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் பேசி முடித்த விவரம், மற்றும் பல உண்மை விவரங்களை மறைத்து பிராதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2022ல் பணம் கொடுத்ததாக சொல்லக்கூடிய சமயத்தில் எனக்கு எந்த வேலையும் கிடையாது,

வருமானமும் கிடையாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் பெற்ற தொகையை என்னிடமும், எனது தகப்பனாரும் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பல தவணைகளாக மாத வட்டி ரூ.25,000/–வீதம் என்னிடம் கொடுத்து வந்தார் என்றால் இல்லை. நான் அண்ணாநகர் 8 வது தெருவில் இருக்கக்கூடிய சமயத்தில் எனது தகப்பனாரை பிரதிவாதி நேரில் சந்தித்த விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் பிரதிவாதி எனது அப்பாவை சந்திக்கவில்லை. பிரதிவாதிக்கு மாடசாமி என்பவர்தான் என் அப்பாவிடம் கடன் பெற்று கொடுத்தார் என்றால் இல்லை. மாடசாமி என்பவர் என் அப்பாவிற்கு நெருக்கமான நண்பரா என்றால் இல்லை. மாடசாமி என் அப்பாவிடம் வந்து பல பேருக்கு கடன் வாங்கி கொடுத்துள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எந்த கிரையமும் பேசவில்லை என்றாலும், எந்த கிரைய ஒப்பந்தமும் போடவில்லை என்றாலும், எந்த அட்வான்ஸ் தொகையும் வாங்கவில்லை என்றாலும், நான் பொய்யான விவரங்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சாட்சிகளை விசாரித்தால் கிரைய ஒப்பந்தம் கடனுக்காக எழுதப்பட்டதா, அல்லது கிரையம் முடிப்பதற்காக எழுதப்பட்டதா என்று தெரியவரும் என்றால் சரிதான். நான் பொய்யான விவரங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றுசொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.